பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 30 (15—11—68) வெள்ளி ★ வெளியூர் : கார்த்திகை 1 (16—11—68) சனி [இதழ் : 125

வருவாய்த் துறை

வாரியத்தின் எதிர்காலம்

★

திருச்சி நவ. 15—

"வருவாய்த் துறை வாரியத்தை (ரெவின்யூபோர்டு) தொடர்ந்து வைத்துக்கொள்வதா -- கலைத்துவிடுவதா என்பதுபற்றித் தமிழக அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது"

என்று அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், கரம்பக்குடியில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திச் சொல்லால் வந்த 'வம்பு'!

அரசு மசோதா ஒத்திவைப்பு

புதுடில்லி, நவ. 15—

மக்களவையில், அரசாங்க மசோதா ஒன்றின் மீதான விவாதத்தை ஒத்திவைக்க வேண்டும் என்ற தங்களுடைய கோரிக்கையில் எதிர்க் கட்சிகள் வெற்றியடைந்தன.

நாட்டில் பிறப்பு -- இறப்புகளைப் பதிவு செய்வதை ஒழுங்குபடுத்துவது பற்றியது இந்த மசோதா; இதன் இந்தி மொழி பெயர்ப்பில், 'பங்கி' என்ற வார்த்தை இருப்பதை எதிர்க் கட்சியினர் எதிர்த்தனர்; 'ஸ்வீப்பர்' (துடைப்பத்தால் பெருக்குபவர்) என்ற ஆங்கில வார்த்தை 'பங்கி' என்று மொழி பெயர்க்கப்பட்டிருந்தது.

"இந்தச் சொல், சிலருடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தும்" என்று எதிர்க் கட்சியினர் கூறியதை துணை அவைத் தலைவர் கடில்கார் ஒப்புக்கொண்டார்.

சர்க்கரைக் கட்டுப்பாடு நீங்காதாம்!

புதுடில்லி, நவ. 15—

"சர்க்கரைக் கட்டுப்பாட்டை முழுவதுமாக நீக்கும் நோக்கம் எதுவும் இல்லை"

என்று மக்களவையில், உணவுத் துறை அரசாங்க அமைச்சர் ஏ.பி. சிண்டே கூறியிருக்கிறார்.

மூடிய தொழிற்சாலையைத் திறக்க ஏற்பாடு

'டெக்ஸ்டூல்' நிறுவனத்தை அரசு ஏற்கும்?

பரிசீலிக்க அதிகாரிகள் கோவை செல்கின்றனர்

சென்னை, நவ. 14—

கோவையில் உள்ள 'டெக்ஸ்டூல்' என்னும் பஞ்சாலைக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைத் தமிழக அரசே எடுத்து நடத்துவது பற்றி ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இத்தொழிற்சாலை சிறிது காலமாக இயங்காமல் இருந்துவருகிறது. இத்தொழிற்சாலை மூடப்பட்டதன் விளைவாக நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து வேறு வேலையும் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கட்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்துடனேயே தமிழக அரசு இந்த யோசனையை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கோவையிலும் மற்றும் பல இடங்களிலும் நூல் தேக்கம் காரணமாக நூற்பாலைகள் இயங்காமல் உள்ளன இதன் விளைவாக 'டெக்ஸ்டூல்' தொழிற்சாலையும் வேலை செய்யவில்லை.

இத்தொழிற்சாலையைப் பார்வையிட்டு, அதனை மேற்கொள்வதாக இருந்தால் எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதையெல்லாம் விவரமாக அறிந்து வரும்பொருட்டு இன்னும் இரண்டொரு நாட்களில், தமிழக அரசின் சார்பில் குழுவொன்று கோவைக்குச் செல்லவிருக்கிறது.

இத்தொழிற்சாலைக்கு சென்னை தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் ஏராளமான பணம் கடனாகக் கொடுத்துள்ளது; அந்தப் பணம் இன்னும் திரும்ப வசூலாகாமல் நிலுவையிலேயே உள்ளதாம்.

நிலவைச் சுற்றிய ராக்கெட்!

பூமிக்குத் திரும்புகிறது

மாஞ்செஸ்டர், நவ. 15—

சந்திரனை நோக்கி இரஷ்யா செலுத்திய 'ஜோன்ட்-6' என்ற ராக்கெட்டு, சந்திரனைச் சுற்றிவிட்டுப் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது.

இந்த ராக்கெட்டு, சந்திரனை ஒரு முறை சுற்றி முடித்துவிட்டது.

சந்திரனுக்கும் -- ராக்கெட்டுக்கும் இருந்த தூரம், 1,500 மைல்கள் தான்; சந்திரனை மிக அருகில் சுற்றிய ராக்கெட்டு இதுதான்.

பூமிக்கும் -- சந்திரனுக்குமிடையே உள்ள தூரம், ஏறத்தாழ $2\frac{1}{2}$ இலட்சம் மைல்களாகும்.

புதியதோர் இந்தியாவை உருவாக்க முயன்றார்

உலகத் தலைவர்கள் வரிசையில் இடம் பெற்றுத் திகழ்ந்தார்

நேரு நினைவு நாள் -- குழந்தைகள் விழாவில் இரா. நெடுஞ்செழியன் புகழ்மாலை

சென்னை, நவ. 15—

"அனைத்து உலகத்திலும் இந்தியா சிறந்து விளங்கவேண்டும் என்று பண்டித நேரு விரும்பினார்; அதற்காக ஆக்கம் நிறைந்த பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார்.

"அவரது சீரிய கொள்கைகளை இளைஞர்கள் தங்கள் நெஞ்சில் இறுத்திப் பாடுபட வேண்டும்.

"இந்நாட்டு மக்களிடையே அறிவியல் மனப்பாங்கு வளர அவர் பாடுபட்டார்; எனவே, 'அவரது சிந்தனைகளைச் செயலாக்குவோம்' என்று நாமனைவரும் இந்நாளில் உறுதி ஏற்போம்."

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நேருவின் பிறந்த நாள் விழாவினையொட்டி, நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 'குழந்தைகள் தின விழா'வில் பேசுகையில் சுட்டிக் காட்டிக் கேட்டுக்கொண்டார்.

கல்வியமைச்சர் விழாவைத் தொடங்கி வைக்க -- பொதுப்பணியமைச்சர் மு. கருணாநிதி விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

துவக்கப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 8,000-த்துக்கு மேற்பட்ட குழந்தைகள் வெவ்வேறு அணிகளாக வந்து நடத்திக் காட்டிய கூட்டு நடனம், ஆடல் -- பாடல் ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தன.

இன்றைய விழா, குழந்தைகள் நலனுக்கான இந்தியக் கழகத்தினரும், மாநகராட்சியினரும் இணைந்து நடத்தியதாகும்.

விழாவினையொட்டி வெளியாகியுள்ள சிறப்பு மலரை மேயர் வேலூர் நாராயணன் வெளியிட்டார்.

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"மக்களுள் மாணிக்கம் என்று காந்தியாரால் புகழப்பட்ட பெருந்தலைவர் நேருவின் பிறந்த நாள் விழாவினைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நேருவின் பெயரைத் தாங்கிய இந்த அரங்கில் ஆயிரக்கணக்கில் குழந்தைகளும் நாமும் கூடியிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இளைஞர்களின் எதிர்காலம் பற்றி அவர் அதிகமாக எண்ணினார்; புதியதோர் இந்தியாவை உருவாக்க எண்ணிப் பாடுபட்டார்; உலகத் தலைவர்கள் வரிசையில் இடம்பெறத்தக்கவராக--ஆனால் சிந்தனையாளர், எழுத்தாளர், பேச்சாளர், கட்டுரையாளர் -- என்று எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினார்."

மலரினும் மென்மையானது

நேருவின் இதயம்

கள்ளங் கபடமற்ற முறையில் நாட்டுக்குப் பாடுபட்டவர்

அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, நவ. 15

"இளமைப் பருவந்தொட்டு மறைகின்ற காலம்வரையில், பண்டித நேரு அவர்கள், 'நாடு, நாடு' என்று சிந்தித்து நாட்டுக்காகவே பாடுபட்டார்!

"வாலிபத்தின் பெரும்பகுதியை சிறையிலே கழித்தார்! அப்படிப்பட்டவரது நோக்கையும் நினைவையும் நெஞ்சிலே ஏற்றிட இந்நாள் நமக்குப் பயன்படட்டும்!

"மறைந்தும் மறையாதிருக்கும் அவரது பிறந்த நாளில் 'நாடு வாழ -- நலிவு தீரப் பாடுபடுவோம்' என்ற சூளுரையை குழந்தைகள் மட்டுமல்லாமல் நாம் அனைவருமே ஏற்றிடுவோம்"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், பண்டித நேருவின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற 'குழந்தைகள் தின விழா'வில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் விளக்கியதாவது:—

"நேருவின் உள்ளம் குழந்தை உள்ளம்; அவரது உடலை மறைத்திருந்த சட்டையில் செருகப்பட்டிருந்த மலர் இருந்ததே-- அந்த மலரினும் மென்மையானது அவரது உள்ளம்; குழந்தைகளின் நினைவாகவே அவர் இருந்தார்.

அப்படிப்பட்ட நல்லவர், தன் சுகத்தை மறந்து நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டுப் பெரும் தியாகம் செய்தார்!

அவரைப்போல நாமும் குழந்தைகள் நலனில் அக்கறை செலுத்த வேண்டுமென்ற நினைப்பிலும், இளஞ்சிறுநம், சிறுமியரும் நினைந்து போற்றவும், அவரது பிறந்தநாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

குழந்தைகள் இன்று பெற்றுள்ள உற்சாகம் போல தொடர்ந்து பெற்றிட நாம் நமது உழைப்பினைச் செலுத்துவோம்.

நாட்டினை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மகத்தானதாய் -- மலையளவினதாய் வளர்ந்திருக்கின்றன.

இங்கு குழுமியுள்ள குழந்தைகள் பெற்றுள்ள சாதாரண வசதியைக் கூடப் பெறமுடியாமல் ஏராளமான குழந்தைகள் பட்டிதொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், வயல் வெளிகளிலும் வாடிக்கொண்டிருக்கின்றன; அந்தக் குழந்தைகளின் வசதிகளைப் பெருக்கவேண்டும்.

கள்ளங் கபடமற்ற குழந்தைகளின் நல்வாழ்வுக்காக, கள்ளங் கபடமற்று அவர் பாடுபட்டார்; நாமும் கள்ளங் கபடமின்றி நம் குழந்தைகளின் நலனுக்காகப் பாடுபட உறுதி ஏற்போம்!"

வாக்களிப்பது கட்டாயமாகுமா?

"தேர்தலில் வாக்களிப்பதைக் கட்டாயப்படுத்துவதற்கான வகையில் சட்டத் திருத்தம் செய்வதற்குரிய யோசனை எதுவும் தேர்தல் கமிஷனிடமிருந்து வரவில்லை"

என்று, சட்ட அமைச்சர் பி. கோவிந்தமேனன் தெரிவித்தார்.

வாக்களிப்பதைக் கட்டாயமாக்க வேண்டுமென்றும், வாக்குரிமையைப் பயன்படுத்தாதவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அண்மையில் தலைமைத் தேர்தல் கமிஷனர் தெரிவித்திருந்தார்.

"இதுபற்றி நன்கு பரிசீலிக்க வேண்டும்" என்றும் அமைச்சர் கூறினார்.

காங்கிரசு அரசின் கடைசி நேர உத்தரவு

'சட்ட விதிக்குப் புறம்பானது' என உயர் நீதிமன்றத் தீர்ப்பு

பக்தவத்சலம் ஆட்சியின் ஊழல் நிர்வாகத்துக்கு ஒரு சான்று!

சென்னை, நவ. 13—

நெல்அரைவை ஆலை ஒன்று நடத்த முன்னாள் காங்கிரசு அரசு வழங்கிய உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தென் ஆற்காடு மாவட்டம் மைலம் அழகானந்த கவுண்டர் என்பவர், நெல் அரைவை ஆலை நிறுவ விரும்பிச் செய்துகொண்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டு வந்தன; ஆனால், 1967 சனவரி 9-ம் நாள் (பொதுத் தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்னதாக) கோட்டையிலிருந்து திண்டிவனம் வட்ட கோட்டாட்சித் தலைவருக்குத் தாக்கீது ஒன்று அனுப்பப்பட்டது.

எந்த ஒருவருக்கு அனுமதி பலமுறை மறுக்கப்பட்டதோ அதே நபரிடமிருந்து புதிதாக விண்ணப்பம் ஒன்று பெற்று அனுப்புமாறு அந்தத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டது. அப்படி வாங்கி அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு (பொதுத் தேர்தல் முடிந்த இரண்டாவது நாள்) பிப்ரவரி 24-ந் தேதி நெல் அரைவை ஆலை நிறுவ அனுமதித்து உத்தரவு அனுப்பப்பட்டது.

ஏற்கனவே அந்த வட்டாரத்தில் நெல் அரைவை ஆலை நடத்திவந்த ஒருவர் அரசு வழங்கிய புதிய உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

"அரைவை ஆலைகள் தொடர்பான சட்ட விதிமுறைகள் அரசாங்கத்தால் மீறப்பட்டுள்ளன" என்று அவர், தமது வழக்கு மனுவில் கூறியிருந்தார்.

"நெல் அரைவை ஆலைக்கான அனுமதி வழங்க அந்த வட்டாரத்தில் போதுமான நெல் கிடைப்பதாக இருப்பது அவசியம்" என்று சட்ட விதிகள் கூறுகின்றன.

"அந்த வட்டாரத்தில் விளையும் நெல் போதுமானதாக இல்லை; எனவே, நெல் அரைவை ஆலை ஒன்று அங்கு நிறுவப்படுவதற்கு நியாயமில்லை" என்று காரணம் கூறியே அழகானந்த கவுண்டருக்கு அரசு, முதலில் அனுமதி மறுத்திருந்தது.

உயர் நீதிமன்றம் இந்த வழக்கைப் பரிசீலித்த பிறகு, 'அரசின் 1967 பிப்ரவரி 24-ந் தேதிய உத்தரவு செல்லாது' என்று அதை ரத்து செய்தது.

இலங்கை இந்தியர்கட்குக் குடியுரிமை

இந்திய அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, நவ. 15—

1964-ல் இந்தியாவும்—இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, சென்ற செப்டம்பர் 30-ம் நாள் வரையில், இந்திய மரபினர் 25,142 பேர்களுக்கு இந்தியக் குடியுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆகஸ்டு 31-ம் நாள் வரையில், அவர்களில் 5,818 பேர்கள் இந்தியாவுக்குத் திரும்பினார்கள்.

வெளிவிவகாரத் துணையமைச்சர் பி. ஆர். பகத் மக்கள் சபையில் எழுத்து மூலம் அளித்த ஒரு பதிலில் இந்தத் தகவலை தெரிவித்தார்.

ஒப்பந்தத்தில் இலங்கையின் பங்கை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு ஓரளவு அலட்சியமாக இருக்கிறது என்பதை அவர் மறுத்தார். 'இலங்கை அரசு தகுதியுடையவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை அளிக்க ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது' என்றும் அவர் கூறினார்.

4 கோடி ஏக்கரில் பலபோகச் சாகுபடி

இந்தியாவில் உணவுப் பெருக்கத் திட்டம்

புதுடில்லி, நவ. 15—

"பலபோகச்சாகுபடித் திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படவிருக்கிறது. இந்தத் திட்டம் நம்நாட்டில் விளைபொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான புதிய நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

முதலில் ஒன்றரைக் கோடி ஏக்கர் நிலத்தில் இந்த பலபோக சாகுபடி செயல்படுத்தப்படும்.

நான்காவது திட்ட இறுதிக்குள் நாடு முழுவதும் 4 கோடி ஏக்கர் நிலம் இந்தப் பல போக சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

இதனால், அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் உணவுப் பொருள்களின் உற்பத்தி 31.5 சதவிகிதத்துக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரக்காரர் என்றாலும் அரசியல் விவேகம் படைத்தவர்

பண்டித நேருவைப்பற்றி காந்தியார்

என்னையும் நேருவையும் பொறுத்தவரையில், போட்டியிடுபவர்களாகக் கருதமுடியாது. ஒரு வேளை நாங்கள் போட்டி போட்டுக் கொண்டாலும், பொதுவான நோக்கத்தை அடைவதற்காகத்தான் போட்டி போடுவோம். அந்த நோக்கத்தை அடைவதற்கான கூட்டு முயற்சியில் சில சமயம் மாறுபட்ட வழிகளை நாங்கள் பின்பற்றுவதாகத் தோன்றலாம்; அப்படியிருந்தாலும், ஒரு வினாடிக்குத்தான் எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கும்; பிறகு அதிக அன்புடனும், பாசத்துடனும் நாங்கள் ஒன்று சேர்ந்துவிடுவோம்.

குழந்தை உள்ளமும், உயர்ந்த வேகமும், பேரறிவும், உலகில் வேறு எவரது திறமைக்கும் ஈடு கொடுக்கக்கூடிய திறமையும் கொண்டவர் அவர். துறக்கும் தன்மையும் அவருக்கு உண்டு. ஒரு பாம்பு அதன் மேல் தோலை நீக்கிவிடுவதைபோல் அவர், அதிகார வசதிகளை ஒதுக்கித் தள்ளக்கூடியவர். அவரது களைப்பற்ற செயலாற்றல், இளைஞர்களைக்கூட வெட்கமுற்றுத் தலைகுனியச் செய்யும்.

'கோபமும், ஆத்திரமும் அவரது குணங்கள்' என்று வைத்துக் கொண்டாலும்கூட, அவர் உண்மையிலேயே ஒரு இரத்தினம் தான்!

சேவை உணர்வும், தியாக மனப்பான்மையும் கொண்ட பெரியோர்கள் பலரை எழில்மிக்க நமது நாடு ஈன்றெடுத்திருக்கிறது; இது நமது உள்ளத்தில் உவகையூட்டுகிறது.

நேரு உண்மையிலேயே ஒரு இரத்தினம்தான்; மற்றவர்களும் இருக்கிறார்கள் -- ஒரு வேளை அவர்களது ஒளி சற்றுக் குறைவாக இருக்கிறது -- அவ்வளவுதான்!

'தனி உரிமைகளுக்கோ, தனி உரிமையும் வசதியும பெற்றவர்களுக்கோ இடமில்லாத சுதந்தர இந்தியாவை உருவாக்க வேண்டும்' என்பதுதான் நேருவின் திட்டம்; 'சொத்துக்கள் அனைத்தும் அரசாங்கத்துக்குச் சொந்தம்' என்று நேரு கருதினார். திட்டமிட்ட பொருளாதாரத்தை அவர் விரும்பினார்; திட்டத்துக்கேற்ப இந்தியாவை மீண்டும் அமைக்க அவர் விருப்பம் கொண்டார்.

சோஷலிசத்தைப் பற்றிய நேருவின் கருத்துக்கள் என்னை அச்சுறுத்துவதில்லை; இவை ஒருவரையும் அச்சுறுத்த வேண்டியதும் இல்லை; நேருவைப் போன்று விவேகமும் நேர்மையும் உள்ள ஒருவரது கருத்துக்கள் நம்மைக் கலங்கவைக்க வேண்டியதில்லை.

வீரத்தில் அவரை யாருமே மிஞ்ச முடியாது; நாட்டுப் பற்றில் யார்தான் அவரை மிஞ்ச முடியும்? அவர் எல்லாவற்றிலும் அவசரப்படுவதாகச் சிலர் கூறுகின்றனர்; இது, அதிகப்படியான ஒரு தகுதிதான்: போர் வீரருக்குரிய உத்வேகமும் அவசரமும் அவரிடம் இருக்கிறது என்றால், இராசதந்திரிக்குரிய விவேகமும் அவருக்கு இருக்கிறது.

அவர் ஒழுங்குக் கட்டுப்பாட்டை நேசிப்பவர். அது தொல்லை தருவதாக இருப்பினும், அதற்கு அடிபணியும் ஆற்றல் படைத்தவர் என்பதை அவரே மெய்ப்பித்திருக்கிறார்; சுற்றுப்புறச் சூழ்நிலையிலிருந்து நீண்ட காலத்திற்குப்பின் நடக்கக்கூடியதைச் சிந்திக்கும் தீவிரவாதி என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அவர் பணிவானவர்; நிலைமை சீர்கெட்டுவிடக்கூடிய அளவுக்கு அவர் எந்தக் கொள்கையையும் பலவந்தமாகத் திணிக்கமாட்டார்; பனிக்கட்டியைப்போல தூய்மை உடைய அவர், சந்தேகத்துக்கிடமின்றி நேர்மைப் பற்றுள்ளவர்.

அவர் ஒரு மனிதாபிமானி; தவறு எங்கு நிகழ்ந்தாலும் அதை எதிர்ப்பார்; ஆதலால் அவர் ஒரு தீவிர தேசியவாதியாக இருந்தபோதிலும், அவரது தேசிய வாதத்தை, 'சர்வதேச வாதம்' மேலும் வளப்படுத்துகிறது.

நிலவை வலம் வரும் விண்வெளி வீரர்கள்

டிச. 21-ல் புறப்படத் திட்டம்

வாஷிங்டன், நவ. 14—

மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள், டிசம்பர் திங்களில், சந்திரனைச் சுற்றிப் பறப்பார்கள்.

"கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது இம்மூவரும், சந்திரனை வலம் வருவர்" என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டிச. 21-ம் நாளன்று, 'அபோலோ--8' ஏவப்படுவதற்கான திட்டம் உருவாகிவிட்டது; சந்திர மண்டலத்தில் சந்திரனை வலம் வருவதுதான் இத்திட்டமாகும்.

சில தொழில்நுட்ப அம்சங்களை கவனித்த பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும்.

பூமியைத் திங்கள்தோறும் வலம் வரும் சந்திரனின் நிலை --- ஏவப்பட வேண்டிய நேரம் --- சந்திரனின் மீதுள்ள இடங்களைப் படம் பிடிப்பதற்கான வெளிச்ச நிலவரம் ஆகியவை கவனிக்கப்படும்.

புதுக்கோட்டை தனி மாவட்டமாகுமா?

அமைச்சர் மதியழகன் விளக்கம்

புதுக்கோட்டை, நவ. 14—

"புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக்குவது பற்றி உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்" என்று அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கூறியிருந்தாரல்லவா? அதுபற்றி அவர் தெரிவித்த விளக்கமாவது:—

"வரலாற்று அடிப்படையிலும், நில அமைப்பு அடிப்படையிலும் புதுக்கோட்டையைத் தனி மாவட்டம் ஆக்க வேண்டும் என்பதில், இரண்டுவிதமான கருத்துக்கள் இருப்பதற்கு இடமில்லை; ஆனால் இதை எப்போது செய்வது -- எப்படிச் செய்வது என்பதில்தான் சங்கடங்கள் உள்ளன.

பொதுவாக, 'மாவட்டங்கள் குறுகலாக ஆக்கப்பட வேண்டும்; ரெவினியூ நிர்வாகத்திற்கு உயிர்ப்பையும், தோற்றத்தையும் கொடுத்துச் சீராக்க வேண்டும்' என்ற பிரச்சினை, பல நாட்களாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

இந்த மாறுதல்களைச் செய்யும் போது, நிதி நிலை உட்பட, பல அம்சங்களை கணக்கில், எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; இதற்காக அமைக்கப்பட்ட மாவட்டச் சீரமைப்புக்

(3-ம் பக்கம் பார்க்க)

தீப்பற்றாத வீடு கட்டும் திட்டம்

இரண்டாவது கட்டம் விரைவில் துவங்கும்

தனியார் நிலம் கிடைப்பதில் உள்ள தடங்கல்--அதிகாரி விளக்கம்

சென்னை, நவ. 14—

"நகரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்கள் பகுதிகளில் எரியாத வீடுகள் கட்டும் திட்டத்தின் இரண்டாவது கட்டம் விரைவில் துவங்கும்"

என்று தமிழக அரசு வருவாய் வாரிய உறுப்பினர் என். எஸ். மணி நிருபர்களிடம் கூறினார்.

தீயினால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு எரியாத வீடு கட்டித் தரும் திட்ட வேலைகளை அவர் விளக்கினார்:—

"சென்னையில் ஏற்பட்ட தீவிபத்துக்களால் வட சென்னையில் 2,500 வீடுகளும், தென் சென்னையில் 1,700 வீடுகளுமாக மொத்தம் 4,200 வீடுகள் நாசமாயின.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எரியாத வீடுகள் கட்டித் தரும் வகையில், மொத்தம் 5,000 வீடுகள் கட்டித் தரவேண்டும் என்பது முதலமைச்சரின் விருப்பமாகும்.

முதல் கட்டத்தில் 1,470 வீடுகள் புளியந்தோப்புப் பகுதியில் கட்டப்பட்டன! மாநகராட்சி இதற்காக நிலம் தந்தது; பொதுப் பணித்துறை வீடுகளைக் கட்டித் தந்தது.

இந்த எரியாத வீடுகள் சீமை ஓட்டு வீடுகள் ஆகும். ஒரு வீட்டுக்குச் செலவு ரூ. 300; இந்த வீடுகளுக்கு வாடகை கிடையாது.

தனியார் துறையினர் தங்கள் நிலங்களைத் தந்து ஒத்துழைத்திருந்தால் வீடு வசதி செய்வதில் இன்னும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும்.

எரியாத வீடுகள் கட்டுவதில் இரண்டாவது கட்ட வேலை விரைவில் துவங்கவிருக்கிறது. பர்மாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கு இந்த வகையில் வீட்டு வசதி செய்யும் பிரச்சினையும் கவனிக்கப்படும். இதில் வியாசர்பாடித் திட்டம் முதலிடம் பெறும்.

விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் இப்படி வீடு ஒதுக்கப்படாதவர்களுக்கு ரூ. 80 உதவிப் பணம் தரப்படுகிறது.

முதலமைச்சரின் தீ விபத்து நிவாரண நிதிக்கு இதுவரையில் சுமார் ரூ. 40 இலட்சம் சேர்ந்துள்ளது; அதில் சுமார் ரூ. 16 இலட்சம் மீதமிருக்கிறது.

இரண்டாவது கட்டத்தில் பாக்கி வீடுகளையும் கட்டி முடித்துவிடலாம் என நம்புகிறேன்."

செஞ்சீனத் தளபதியின் பிதற்றல்!

ஹாங்காங், நவ. 13—

"இந்தியாவின் பிற்போக்கு ஆட்சியாளர்கள், போர் ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றனர்; அவர்கள், தங்களுக்குக் கிடைக்கும் சில ஆயுதங்களை நம்பியே போரில் ஈடுபடத் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

"தீயில் வீழ்ந்து அழியும் பூச்சிகளைப்போல் அவர்கள், தங்களுக்கு அழிவைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்"

என்று செஞ்சீனத் தளபதி ஜெனரல் ஹங் யங் செங், விருந்தொன்றில் பேசுகையில் அச்சுறுத்தியிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியா படைகளைப் பெருக்கிக் கொண்டிருப்பதாகவும், அதன் மூலம் பாகிஸ்தான், சீனா ஆகியவைகளின் பாதுகாப்புக்கு அபாயத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

அணு மின் நிலையம்

நில அதிர்ச்சி பாதிக்காதிருக்க ஏற்பாடு

அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் முறை பிரிட்டனில் நடைமுறையில் இருந்துவருகிறது. இப்படி உருவாக்கப்படும் மின் நிலையங்களை, கடும் நில அதிர்ச்சி ஏற்பட்டாலும் பாதிக்காமல் இருக்கும் அளவுக்கு நவீன முறையில் அமைக்க முடியும் என்று இப்போது பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.

ஆசிரியர்கட்கு ஓய்வூதியம்

மற்றும் சில பிரிவினருக்கும் விரிவாகிறது

ஆசிரியர்கள் பென்ஷன் திட்டத்தைக் கீழ்க்கண்ட இனங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் அரசு விரிவுபடுத்தியுள்ளது.

1. துவக்க -- உயர்நிலை ஆங்கிலோ–இந்தியர் பள்ளிகள், சிறப்புப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள் ஆகியவைகளிலிருந்து ஓய்வு பெற்றோர்.

2. மாற்றப்பட்ட பகுதிகளிலுள்ள பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்றோர்.

3. அரசு உதவிபெறும் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்றோர்.

முதலாவது இனத்தில் 1—4—55-க்குமுன் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் 1—3—1968-லிருந்து பென்ஷன் பெறலாம்; ஆனால், இந்தத் தேதிக்கு முந்தின பாக்கியைக் கேட்க அவர்களுக்கு உரிமை கிடையாது.

இரண்டாவது இனத்தின் கீழ் உள்ள ஆசிரியர்கள் 1—11—56-லோ, பிறகோ ஓய்வு பெற்றிருந்தால், 1-3-68-லிருந்து 'பென்ஷன்' உண்டு; இவர்களுக்கும் முன் பாக்கிக் கோர உரிமை கிடையாது.

மூன்றாவது இனத்தைப் பொறுத்தவரையில், 1-4-55-க்கு முன்பும், 1—4—55-க்கும்—1—1—62-க்கு இடையிலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு 1-3-68 லிருந்து 'பென்ஷன்' உண்டு; ஆனால், முன் பாக்கிக் கிடையாது.

குடந்தை நகரில்
அமைச்சர் சாதிக் பாட்சா

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

பொது அமைப்புக்களின் சார்பில் சிறப்பான வரவேற்பு

குடந்தை, நவ. 15—

சுகாதார அமைச்சர் எஸ். ஜே சாதிக்பாட்சா அவர்கள் 10–11–68 காலை 7-30 மணிக்கு குடந்தை வந்தடைந்தார். குடந்தை நகர தி. மு. க. செயலாளர் எஸ். ஆர். இராதா எம்.சி. மலர் மாலை அணிவித்து வரவேற்றார்.

கழகத் தோழர்கள் அமைச்சரை வரவேற்க அதிகாலை 6-மணியிலிருந்தே திரளாகப் புகைவண்டி நிலையத்தில் வந்து குழுமியிருந்தனர். அமைச்சரைப் பொதுமக்களும் உற்சாகமான மனமகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

குடந்தை பயணிகள் விடுதியில் சிறிது நேரம் ஓய்வெடுத்துச் சிற்றுண்டி முடித்தபின் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளப் புறப்பட்டார்கள்

மக்கள் நல மன்ற வரவேற்பு

தஞ்சை மாவட்ட மக்கள் நல மன்றச் சார்பிலும், சாது சேஷய்யா நூல் நிலையத்தின் சார்பிலும் சிறந்த முறையில் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

அமைச்சருக்கும், மலேசியா நாட்டின் பெருவணிகர் டத்தோ ஹாஜி அப்துல் பஜீத் அவர்களுக்கும் அவர்களின் சிறந்த சேவையைப் பாராட்டி தஞ்சை மாவட்ட மக்கள் நல மன்றச் செயலாளர் பி. கே. டி. சண்முகம், தலைவர் முகம்மது இபுராகீம், குடந்தை வணிகர் சங்கத் தலைவர் கே. சாமிநாதன், குடந்தை பெருநகரச் செயலாளர் எஸ். ஆர். இராதா எம்.சி, வி. சின்னத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் பாராட்டுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

வழக்கறிஞர் சங்க வரவேற்பு

வழக்கறிஞர் சங்கத் தலைவர் திரு. கல்யாணராமன் தலைமையில் நடந்த வழக்கறிஞர் சங்கக் கூட்டத்தில், வழக்கறிஞர்கள் பலர், தி. மு. கழக அரசின் நிர்வாசத் திறமையையும், அமைச்சரின் பணிகளையும் பாராட்டி உரையாற்றினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் உரையாற்றுகையில், நாட்டின் சுகாதாரம் -- ஒழுக்கம் -- பண்பாடுகள் காக்கப் பாடுபடுவேன் என்றும், படித்துப் பட்டம் பெற்ற வழக்கறிஞர்களும் ஏனையோரும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுச் சிறந்த அரசியலையும், சனநாயகத்தையும் கட்டிக்காக்க முனையவேண்டுமென்றும், அதற்கு வழக்கறிஞர்கள் சேவை தேவையென்றும் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் சங்கச் செயலாளர் ரங்கநாதன் நன்றி தெரிவித்தார்.

தாய்--சேய் நல விடுதித் திறப்பு

மாலை 4-மணிக்குக் குடந்தை காமராஜ் சாலையில் உள்ள தாய்--சேய் நல விடுதியில் புதிதாக விரிவாக்கப்பட்ட மகப்பேறு விடுதியை அமைச்சர் திறந்துவைத்தார்.

குடந்தை நகர்மன்றத் தலைவர் என். காசிராமன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அடுத்து குடந்தை நகர 18-வது வட்டத்தில் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

17-வது வட்டத்தில் நகரசுத்தித் தொழிலாளர்கள் நிரம்பிய பைராகித் தோப்புப் பகுதிக்கு வருகை தந்த அமைச்சருக்கும், மற்றுமுள்ளோருக்கும் இனிப்பு வழங்கி வரவேற்றனர்; அங்கு அமைச்சர் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

அங்கு வாழும் மக்களின் தலைவரான கதிர்வேல் தலைமையில் கழகத் தோழர் ஜோதிமணி வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

அண்ணா படத் திறப்பு

குடந்தை பயணிகள் விடுதியில் உள்ள காமராசர் மாளிகையில் நகரச் செயலாளர் எஸ். ஆர் இராதா எம்.சி. அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை அமைச்சர் திறந்து வைத்து, அண்ணாவின் சிறப்பியல்புகளையும், மாற்றாரின் பேரன்பையும் பெற்றுத் திகழும் திறமையும் குறிப்பிட்டு உரையாற்றினார்.

அரிமா சங்க விழாவில்

குடந்தை லையன்சு கிளப் சார்பில் நகர உயர்நிலைப் பள்ளியில் அமைச்சரின் சேவையைப் பாராட்டி வரவேற்றுச் சிறப்பித்தனர்.

குடந்தைப் பெருநகர வட்ட தி. மு. க. சார்பில் வி சின்னதம்பி தலைமையில் குடந்தை மூர்த்தி கலையரங்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; அதுபோது, கோவி வெங்கடேசன், சீ. பா. ரெங்காச்சாரி, ஆ. சின்னசாமி, மைதீன் பாட்சா, எஸ். கோதண்டராமன், இராமதாசன், ம. கோ. மணி, எஸ். ஆர். இராதா ஆகியோர் பேசிய பின், அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், சிறப்புமிக்க உரையாற்றினார்.

மதுரையில்:
முஸ்லீம் லீக் சார்பில் வரவேற்பு

மதுரையில் நடைபெற்ற நகர் சுத்திகரிப்பு விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த சுகாதாரத் துறை அமைச்சர் எஸ். ஜே சாதிக் பாட்சா அவர்களுக்கு மதுரை நகர் முஸ்லிம் லீக் சார்பில் 'காலேஜ் அவுஸ்' மண்டபத்தில் சிற்றுண்டி விருந்து கொடுக்கப்பட்டது.

அமைச்சருடன் மதுரை நகராட்சி மன்றத் தலைவர் கே. எஸ் இராமகிருஷ்ணன், மதுரை மாவட்ட தி. மு க. செயலாளர் எஸ். முத்து எம் எல்.சி., சி. கோவிந்தராசன் எம் எல் .ஏ., சுதந்திராக் கட்சிப் பிரமுகர் பி. எஸ் இராமசுப்பிரமணியன், டாக்டர் சத்தார், எம். ஹீரா, மற்றும் நகரிலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள் -- சர்வ கட்சி ஊழியர்கள் -- தொழிலதிபர்கள்--அதிகாரிகள் பலரு கலந்துகொண்டனர். 'காயிதேமில்லத்' மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் கைத்தறியாடைகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

உரமிட உதவும் புதிய இயந்திரம்!

இலண்டன், நவ. 14—

ஓர் ஏக்கர் நிலத்தில் 20 டன் இரசாயன உரமிட வேண்டுமா? அதனை நிலப்பரப்பு முழுவதிலும் சம அளவுக்கு, ஓர் இடத்திலும் கூடவோ குறையவோ இல்லாமல் பரவலாக இடலாம்.

அதே நிலத்தில் இருநூறு டன் இருந்தாலும் சரி -- இரண்டாயிரம் டன் இருந்தாலும் சரி-- சம அளவில் உரமிட ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளனர் பிரிட்டனில். இதன் திறன் 20 டன்களிலிருந்து 2500 டன்கள்வரையிலானது.

பயிரிடுமுன் நிலங்களில் உரமிடப் பயன்படுவதுடன், பயிர்வளர்ந்து வரும் நிலையிலும் மேலும் உரமிட இதே இயந்திரம் பயன்படும் என்பது இதில் குறிப்பிடத்தக்கது.

நின்ற நிலையில் 25 அடி சுற்றளவுக்கான நிலப்பரப்பில் இந்த இயந்திரம்மூலம் உரமிட இயலும்; பின்னர் இதனை வேறு நிலைக்கு நகர்த்திப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தத் தனி வசதி இருப்பது இதன் சிறப்பு ஆகும்

கடலில் மறைந்துள்ள
அரும் பெரும் செல்வங்கள்

அனைத்தையும் கண்டறிந்து மீட்க முயற்சி

ஐ. நா. மன்றச் சார்பில் ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டம்

"பெருங் கடல்களின் படுகைகளில் பல்வேறு வளங்கள் செழிப்பாக உள்ளன; ஆழ் கடல்களில் எண்ணெய் இருக்கிறது"

என்று அமெரிக்கா--தீர்மானம் ஒன்றின் மூலம் பொதுச் சபையிடம் வற்புறுத்தியது.

1970-ல், 'உலகப் பெருங் கடலாராய்ச்சிப் பத்தாண்டு' ஒன்று துவங்குவதற்கு ஒப்புதல் தந்து அதனைத் துவக்கி வைக்கும்படியும் அமெரிக்கா ஐ நா.-வைக் கேட்டுக் கொண்டது.

பெருங் கடல்களின் படுகைகளில் என்னென்ன வளங்கள் இருக்கின்றன என்று இன்னும் உலகுக்குத் தெரியாது. அது மட்டுமல்ல; மக்கள் குலத்தின் நன்மைக்காக இந்த வளங்களை எப்படி எடுப்பது என்பதும் தெரியாது--எடுப்பதற்கு என்ன செலவாகும் என்பதும் தெரியாது.

எனவே, தோண்டும் கருவிகளையும், வாரும் கருவிகளையும், குடையும் கருவிகளையும் எடுத்துக்கொண்டு கடற்படுகைகளைத் தோண்டப் புறப்படலாகாது என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

ஏனெனில், எதைத் தோண்ட வேண்டும் -- எப்படித் தோண்ட வேண்டும் --- என்பது இன்னும் எவருக்கும் தெரியாது; மேலும், கண்மூடித்தனமாக இந்த வேலையில் இறங்கினால், கடல்வாழ் உயிரினங்களுக்குக் கேடு ஏற்படும் -- கடலிலும் நஞ்சு பரவக் கூடும்.

பெரிய ஆறுகளின் முகங்களுக்கு அருகே -- ஆழத்தில் தங்கம், இரும்பு, டிட்டோனியம், வைரம் முதலியவற்றின் படிவங்கள் காணக்கூடும்.

கடற்படுகையில் பெட்ரோல் காணப்படும்.

ஆழம் அதிகம் இல்லாக் கடல்களில் கோபால்ட். நிக்கல், செம்பு, முதலிய உலோகங்களும் இருக்கின்றன.

இப்பொழுது இவை பற்றி இருக்கும் அறிவைப் பெருக்க விரிவான ஆராய்ச்சி தேவையாகும்.

கடற்படுகைகளிலிருந்து செல்வங்களை மீட்கும் பணியில் தொழில் நுட்ப -- பொருளாதார -- அம்சங்கள் சம்பந்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முடிவில் எண்ணெய்த் தொழில் நிபுணர்கள் 200 மீட்டர் தண்ணீருக்கடியில் இருக்கும் கிணறுகளிலிருந்து எண்ணெய் எடுப்பர்; மூன்று முதல் ஐந்தாண்டுக்குள் இந்த ஆழம் 500 மீட்டர் வரையும் போகலாம்; 10 ஆண்டுகளில் 2,000 மீட்டர் அல்லது $1\frac{1}{4}$ மைல் ஆழம் போகலாம்; ஆனால் இவற்றுச்கு இன்றுள்ள தொழில் நுட்ப அறிவு போதாது! பொருளாதாரத் துறையில் கட்டுபடியாகுமா என்பதும் ஒரு கேள்வி ஆகும்!

உலகப் பெருங்கடல் ஆராய்ச்சிப் பத்தாண்டு வெற்றி பெற வேண்டுமானால் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பல நாடுகளும் பங்கு ஏற்று ஒத்துழைக்க வேண்டும்; குறிப்பாக, வளரும் நாடுகள் சேர வேண்டும்.

பின்தங்கிய
மாநிலங்களின்
வளர்ச்சி

புதிய திட்டத்தில் கவனிக்கப்படுமாம்

நடப்பு தொழில் திட்டங்கட்கு ரூ. 1,500 கோடி தேவையாம்

புதுடில்லி, நவ. 14—

"பின்தங்கிய மாநிலங்கள் வளர்ச்சியடைய முடியாமல் தடுக்கும் அவற்றின் தனிப் பிரச்சினைகளைப் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ஆய்வு செய்யப்படும்"

என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பி. ஆர். பகத் மக்களவையில் கூறினார்.

வேகமான வளர்ச்சி ஏற்பட வேண்டிய பின்தங்கிய பகுதிகள் எவை என்று திட்டக் குழுவைச் சார்ந்த ஒரு குழு நிர்ணயிக்க முயன்று வருகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

'விவசாய வளர்ச்சி---தொழில்களைத் துவக்குவது -- நிதி வசதிகளை விரைவுபடுத்துவது உட்பட பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சி பற்றி இக்குழு ஆலோசனைகூறும்" என்றும் அவர் கூறினார்.

இப்போது செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய தொழில் துறைத் திட்டங்களை நிறைவேற்ற 1967—68-க்குப் பிறகு ரூ 1,500 கோடி முதலீடு தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது' என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறினார்.

பொதுத்துறைத் திட்டங்கள் செயல்படும் விதம் பற்றிய புகார்களுக்குப் பதிலளிக்கையில், அவற்றின் நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்டால் அவை நல்ல முறையில் இயங்கும்" என்றார் அவர்.

இந்துஸ்தான் உருக்காலை நட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், 'தொழில் மந்த நிலையின் விளைவாக உள்நாட்டில் உருக்குக் கிராக்கி வீழ்ச்சியடைந்து விட்டது இதற்கு ஒரு காரணம்' என்று அவர் கூறினார்.

புதுக்கோட்டை தனி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குழு, பல சீரமைப்புகளைக் கூறியிருக்கிறது.

இந்தச் சீரமைப்புக்களை வருவாய்த் துறை வாரியமும், அரசும் ஆழ்ந்து பரிசீலனை செய்து இருக்கிறது.

இவை குறித்து முடிவுகள் மேற்கொள்ளும்போது, புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்குவது குறித்து அரசு கண்டிப்பாகப் பரிசீலனை செய்யும்."

தமிழக மின்சார வாரியம்

கோதையாறு நீர் மின் திட்டம் K 2-காண்டிராக்ட்

குறிப்பு எண்: K. C. 150

தமிழக மின்சார வாரியம்—கோதையாறு நீர் மின் திட்டம் Penstock II—Concreting the Superstructure for Anchor 2 of Penstock II.

ஸ்பெசிபிகேஷன் No. KC. 150.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின் படி அதனுடைய முகவுரையில் எழுதப்பட்டு முத்திரையிட்ட டெண்டர்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 5—12—68 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தார்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன்னால் திறக்கப்படும்.

டெண்டர் செட்டுகளின் நகல்களை (மாற்றத்தக்கதல்ல) ஒவ்வொரு செட்டிற்கும் மேலே குறிப்பிட்டுள்ளபடி ரூ. 5.15 (ரூ. ஐந்து மற்றும் பைசா பதினைந்து மட்டும்) (விற்பனை வரி உட்பட) செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது. டெண்டர் செட்டுகள் விற்பனைக்குக் கிடைக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான பிணைத்தொகை ரூ. 1,500 (ஆயிரத்து ஐநூறு ரூபாய்) கீழே ஒப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் முன்னதாகச் செலுத்தி அதற்கான செலுத்துச்சீட்டை டெண்டர் நகலுடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் செக்குகள் (cheques) ஏற்கப்படமாட்டா.

வாரியத்தினரால் குறிப்பிட்டுள்ள மனு பாரத்தில் இல்லாத டெண்டர்கள் அல்லது இறுதித் தேதி நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். கீழே ஒப்பமிட்டுள்ளவருக்கு வேலைகளை சில அல்லது எல்லா டெண்டர்தார்களுக்கும் பகிர்ந்து வழங்கவும் அல்லது சில அல்லது எல்லா டெண்டர்களையும் ஏற்றுக்கொள்ளவோ, காரணம் சொல்லாமல் மறுக்கவோ உரிமையுண்டு.

தபால் போக்குவரத்தில் ஏற்படும் தாமதத்திற்கும் காணாமல் போகும் எந்த டெண்டர் செட்டுக்கும் மின்சார வாரியம் பொறுப்பாளியாகாது.

மேற்பார்வைப் பொறியாளர்
கோதையாறு நீர் மின் திட்டம்

கோதையாறு
கீழ்முகாம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்

ஊருணிக்குக் கரையமைத்துச் செப்பனிட்டனர்

சின்னமனூரில் சீரணியின் சிறந்த பணி

ஊர் மக்களின் உற்சாகமான ஒத்துழைப்பு

சின்னமனூர், நவ 15—

சின்னமனூர் ஒன்றியம், சங்கராபுரத்திலுள்ள 'செட்டியார் ஊருணி'யைத் தூர் வாரி கரை அமைக்கும் வேலை, சின்னமனூர் ஒன்றியச் சீரணியினரால் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டது.

சுமார் 413 வீடுகளைக் கொண்ட இச்சிறிய கிராமத்தில் ஊர் மக்கள் ஆண்களும் -- பெண்களுமாகச் சுமார் 250-க்கு மேற்பட்டோர் மண் வெட்டி, சீரணி ஊழியர்களுடன் உற்சாகம் பொங்க வேலை செய்தார்கள்.

சுமார் ரூ. 600 மதிப்புள்ள இந்த வேலையை ஆறே மணி நேரத்தில் (400 அடி நீளமுள்ள கரைபோட்டு தூர் வாரி) முடித்தனர். இந்த வேலையின் பயனாக 30 நீர்ப்பாசனக் கிணறுகளுக்கு நீர் ஊற்றுக் கிடைத்து, விளைச்சலைப் பெருக்க வழி ஏற்பட்டது; கால்நடைகளுக்கும் தண்ணீர் வசதி கிடைக்கிறது; சலவைத் தொழிலாளர்களுக்கு 10 சலவைக்கல் வரை போட்டுப் பணி செய்ய வசதி கிடைக்கிறது; மழை நீர் வீணாக ஓடையில் போய் ஊருக்குள் நுழைந்து சேதம் உண்டாக்கும் ஆபத்து தடுக்கப்படுகிறது.

ஒன்றிய ஆணையாளர் அ. சிவகுருநாதன், பொறியியலாளர் எம். மாயாண்டி, ஊராட்சித் தலைவர் எஸ். பாப்புசாமி, சீரணி ஊழியர்கள் எஸ். வேல்சாமி, எம். இரத்தினம், இராச. மாயாண்டி, பெ. நாராயணன், வீரையா, இரத்தினசாமி, மற்றும் ஒன்றியப் பணியாளர்கள் ஆகியோர் சிறப்பாக வேலையை இயக்கினர்கள்.

இது, சின்னமனூர் சீரணியினரின் 6-வது பணியாகும்.

இரண்டு குலுக்கலிலேயே குறியளவைத் தாண்டிவிடும்

பரிசு சீட்டு மூலம் கிடைக்கும் வருவாய்

தமிழக அரசின் பொதுநலத் திட்டங்களுக்கு மக்கள் காட்டும் பேராதரவு

சென்னை, நவ. 15—
தமிழக அரசுப் பரிசுச் சீட்டுக்களை, விற்பனையாளர்களிடமிருந்து பொதுமக்கள் நவ. 19-ம் நாள் வரையில் வாங்கிக்கொள்ளலாம்; அதாவது குலுக்கலுக்கு முந்திய நாள் வரையில் விற்கப்படும்.

இரண்டாவது குலுக்கலுக்காக 11 வரிசைகள் வெளியிடப்பட்டுள்ளன; இவற்றில் உள்ள 110 இலட்சம் சீட்டுக்களும் அரசாங்க சஜாநுக்களிலிருந்து விற்பனையாளர்களுக்கு விற்கப்பட்டுவிட்டன.

முதல் குலுக்கலில் சுமார் ரூ. 50 இலட்சம் நிகர வருமானம் அரசுக்குக் கிடைத்துள்ளது; இரண்டாவது குலுக்கலில் ரூ. 75 இலட்சத்திற்குக் குறையாமல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, இரண்டு குலுக்கல்கள் மூலம் மட்டுமே அரசுக்கு சுமார் ரூ. 125 இலட்சம் கிடைக்கும்.

ஓராண்டில் ரூ. 1 கோடி கிடைக்க வேண்டும் என்று முதலில் மதிப்பிடப்பட்டதைவிட இரண்டு குலுக்கல்களிலேயே அதிகமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மூன்றுவது குலுக்கலுக்கும் 10 வரிசைகளுக்குக் குறையாமல் வெளியிடப்படலாம்.

இரண்டாவது குலுக்கலுக்கான சீட்டுக்கள் மாவட்டவாரியாக விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட விவரம் :—

சென்னை நகரம்	24,34 060
கோவை	10,25,000
தஞ்சாவூர்	10,13,000
திருச்சி	9,59,980
மதுரை	9,55 000
தென் ஆற்காடு	8,79,000
திருநெல்வேலி	6 90,000
சேலம்	6 62,000
இராமனுதபுரம்	6,33,000
செங்கற்பட்டு	5,95,000
வட ஆற்காடு	5,47,960
கன்னியாகுமரி	2 22 000
தர்மபுரி	2,04,000
நீலகிரி	1,80,000

பரிசுச் சீட்டு மூலம் மிச்சப்படும் பணத்தை மக்கள் நலனுக்கான பலவேறு வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடத் தமிழக அரசு கருதியிருப்பது தெரிந்ததே.

கம்பவுண்டர்களும் டாக்டர்களாகலாம்!

பற்றுக்குறை நீங்கும்

மதுரை, நவ. 15—
"மருத்துவத் தொழிலில் பத்தாண்டுகள் அனுபவம் உள்ள கம்பவுண்டர்கள், 11-வது ஆண்டுமுதல், 'டாக்டர்'கள் போன்று பணியாற்றலாம்; 'பட்டம் பெருத டாக்டர்' என்று போர்டு வைத்து, தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தலாம்"

என்று, சுகாதாரத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். மேலும் அவர் இதுபற்றி விளக்கியதாவது :—

"இவர்கள் 28 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும்; அறுவைச் சிகிச்சை செய்வதில் இவர்கள் ஈடுபடக்கூடாது; மற்ற எல்லாச் சிகிச்சைகளும் செய்யலாம்.

"இந்த யோசனையை மற்ற எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுவிட்டதால், நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

"இந்தத் திட்டம் செயலுக்கு வந்தால், தமிழ் நாட்டில் ஏறத்தாழ 1,000 பேர் டாக்டர்களாவார்கள்; இதன்மூலம், டாக்டர்கள் பற்றுக்குறையும் நீங்கும்."

கச்சத் தீவு பற்றிக் கலந்தாலோசிப்பாராம்!

புதுடில்லி, நவ. 15—
"இந்தியாவுக்கு வருகைதரவிருக்கும் இலங்கைத் தலைமையமைச்சர் சேனநாயகாவுடன்கச்சத்தீவு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவேன்"

என்று தலைமையமைச்சர் இந்திரா, மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் விலைவாசி ஏற வழியா?

நோட்டுகளை அச்சடித்துக் குவிக்கிறது டில்லி!

புதுடில்லி, நவ. 15—
அளவுக்கு மீறி ரூபாய் நோட்டுகள் அச்சடிப்பதால், விலைவாசிகள் உயருகின்றன எனத் தெரிந்திருந்தும் -- தனக்கு அதிகப் பணம் தேவைப்படுவதால் மத்திய அரசு, ரூபாய் நோட்டுக்களை அச்சடிப்பதில் தீவிரமாக இறங்கியிருக்கிறது.

நாசிக் நகரிலுள்ள மத்திய அரசின் அச்சகத்தில் ஒரே வாரத்தில் ரூ. 40 கோடிக்கு நோட்டுகளை அச்சடித்துப் புழக்கத்திற்கு விடப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் செலவுக்காகவே இந்த நோட்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதனையும் சேர்த்தால், இப்போது ரூ. 3,253 கோடி நோட்டுகள் புழக்கத்தில் உள்ளன.

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர்

அறிவிப்பு

"மதுரை மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தைச் சார்ந்த பண்ணைக்காடு கிளை பொறுப்பாளராகத் தோழர் ஆர். நித்தியானந்தம் அவர்களை நியமித்திருந்தேன்; அவருடைய செயல்முறைகள் கழக வளர்ச்சிக்குப் பாதகமாயிருப்பதால், இன்றுமுதல் (12—11—68) அவரைப் பொறுப்பாளர் பதவியிலிருந்து நீக்கியிருப்பதோடு, இனிமேல் பண்ணைக்காடு திராவிட முன்னேற்றக் கழகக் கிளைத் தேர்தல் நடக்கும்வரை மாவட்டக் கழக மேற்பார்வையில் இயங்கிவரும்"

என்று மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிருர்

நீலகிரி மாவட்ட தி. மு. க. கிளைகட்கு

"வருகின்ற நகராட்சித் தேர்தல் குறித்து ஆலோசிப்பதற்காக, 17—11—68 பிற்பகல் 2-மணியளவில், உதகை எட்டின்ஸ் ரோடிலுள்ள மாவட்ட தி. மு. க. அலுவலகத்தில், நீலகிரி மாவட்டத்திலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், அந்தந்தக் கிளைச் செயற்குழு உறுப்பினர்களும் கொண்ட கூட்டம் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும், அந்தந்தக் கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று மாவட்டச் செயலாளர் கே. பி. முருகேசன் கேட்டுக்கொள்கிருர்.

தனியாகத் தொழில் நடத்தும் அரசாங்க டாக்டர்கள்

தடைவிதிக்கத் தமிழக அரசு யோசனை

மதுரை, நவ. 14—
"அரசு மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர்கள், தனியாகத் தொழில் நடத்துவதைத் தடைசெய்யும் பிரச்சினை தற்போது தமிழக அரசின் பரிசிலனையில் இருந்துவருகிறது"

என்று அமைச்சர் சாதிக்பாட்சா, செய்தியாளர்களிடம் கூறினர். அவர் மேலும் கூறியதாவது :—

"அரசு மருத்துவர்கள் தனியாகத் தொழில் நடத்துவது தடைசெய்யப்பட்டுவிட்டால், அரசு மருத்துவமனைகளில் இன்னும் திறமையாக வேலைகள் நடைபெறும்.

"இப்படித் தனியாகத் தொழில் நடததுவதைக் கடந்த நவம்பர் முதல் நாள் தொட்டுத் தடைசெய்துள்ள ஆந்திர அரசிடமிருந்து, அந்த உத்தரவு பற்றிய விவரங்களைக் கேட்டுள்ளேன்.

"அரசு மருத்துவமனைகள் மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கான வழிவகைகளை விவாதித்துக் கண்டறிய அந்தந்த மருத்துவமனைத் தலைவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்ட உத்தேசித்துள்ளேன்.

'நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலுமுள்ள அரசு மருத்துவமனைகளில் திடிரென நுழைந்து சோதனைபோடுவது, அவற்றின் உண்மையான நிலையைக் கண்டறிவதற்காகத்தான்."

கன்னட மக்களுக்குப் பாதுகாப்பு

கருநாடக முதல்வர் உறுதிமொழி

பெங்களூர், நவ. 15—
"நான் அதிகாரத்தில் இருக்கும் வரையில், மைசூர் மாநிலத்தில் கன்னடியர்களுக்கு வேலைவாய்ப்புத் துறையில் எவ்விதமான அநீதியும் ஏற்படாமல் கவனித்துக்கொள்ளுவேன்"

என்று, மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பாடீல், விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

பஸ் அதிபர்கள்

வேலைநிறுத்தம் செய்வராம்!

புதுடில்லி, நவ. 15—
பஸ் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரி அதிகமாக இருப்பதால், அதனை அரசுக்குத் தெரிவிப்பதற்காக இந்தியா முழுவதிலுமுள்ள பஸ் அதிபர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்களாம்.

வேலைநிறுத்தத்துக்கான நாள், டிச. 17-ம் நாள் நடைபெறவிருக்கும் அனைத்திந்திய பஸ் அதிபர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்படுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கழிஞ்சூர் ஊராட்சி திருவள்ளுவர் பூங்கா

அமைச்சர் மதியழகன் திறந்துவைப்பார்

கழிஞ்சூர் ஊராட்சி மன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிறுவர் பூங்காவை உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் 17—11—68 மாலை 5-மணிக்குத் திறந்துவைப்பார்; அதுபோது அமைச்சருக்கு ஊராட்சி மன்றம் வரவேற்பு அளிக்கும்; விழாவுக்கு திரு. பி. கே. முனுசாமி தலைமை வகிப்பார்; ஜி.நடராசன் எம்.எல்.ஏ. கே. என். தேவராசன் ஆகியோர் பேசுவர்.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவ. 16 : மாலை 6 மணி: ஒரத்தூர் (அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்)–பள்ளிக் கட்டடத் திறப்பு விழா; இரவு 7 மணி: ஒரத்தூர் —மின் விளக்கேற்று விழா.

நவ. 17 : காலை 8 மணி: காட்டுக்கோட்டை (ஆத்தூர் வட்டம்) உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 9 மணி : கல்பகனூர்; மாலை 3 மணி : புத்திரகவுண்டன் பாளையம் — பள்ளிக் கட்டடத் திறப்பு; 4 மணி : மஞ்சினி— —மின் விளக்கேற்று விழா; 5 மணி : கெங்கவல்லி — வரவேற்பு; இரவு 7 மணி : தம்மம்பட்டி—பெண்கள் உயர்நிலைப் பள்ளி அடிக்கல்நாட்டு விழா; 7-30 மணி : தம்மம்பட்டி—பொதுச்கூட்டம்; 9 மணி : ஆத்தூர்—பொதுக்கூட்டம்.

நவ. 18 : காலை 10 மணி : ஈரோடு —ஈரோடு சரக பள்ளிச் சீரமைப்பு மாநாடு; பகல் 12 மணி : சிக்கையா நாயக்கர் கல்லூரி காந்தி நூற்றுண்டு விழாவில் கலந்துகொள்ளல்; மாலை 4 மணி : ஈரோடு கருவிப்பட்டரை மற்றும் மரையாணி, திருகுமரைப் பிரிவு பார்வையிடல்; மாலை 5-30 மணி : விசயபுரம்—பள்ளிக் கட்டடத் திறப்பு.

குழுக் கூட்டம்

"கோவை நகர தி. மு. க உறுப்பினர்கள் கூட்டம் 17—11—68 காலை 9-மணிக்கு நகரக் கழக அலுவலகத்தில் நடைபெறும்" என்று செயலாளர் கி. அரங்கநாதன் அறிவிக்கிருர்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

16--11--68

குடியேற்றம்

வட்ட -- நகர தி மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு ஆற்றுப் பாலம் அருகில்; தலைவர் : ஏ. இராமகிருட்டிணன்; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், எஸ். கே. சம்பந்தம் எம்.பி., ஜி. குசேலர் எம்.பி., எஸ். முருகையன் எம்.எல்.ஏ., பி. செயராமன் எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம், பி. கே. முனுசாமி, ஏ. க. துரைசாமி, செ. ம. அரங்கசாமி, சு. கோபால், தட்சணமூர்த்தி, ஏ. வி. துரைசாமி.

குன்னூர்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் சார்பில் 3 மணிக்கு வி. பி. தெருவில்; தலைவர் : இர. இராசு; பேசுவோர் : த. நஞ்சுண்டான், செயராமன், சு. பிறைமதி, ஆர். எஸ் இராசு, தி. பெ. இராமச்சந்திரன். (முருகு பாண்டியனின் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

காஞ்சியில் கவியரங்கம்

காஞ்சி நகர தி. மு. க. சார்பில் அண்ணு கவியரங்கம் 17—11—68 காலை 9-மணிக்கு கண்ணன் டாக்கீசில் நடைபெறும்; தலைவர் : அமைச்சர் மா. முத்துசாமி; கவி பாடுவோர் : கா. வேழவேந்தன், பொன்னிவளவன், தி. கு. நடராசன், முருகுசுந்தரம், முத்துலிங்கம், அப்துல் ரகுமான், தமிழன்பன், வல்வல் வேங்கடபதி, மணிவேந்தன்.

கலை நிகழ்ச்சி

மதுரை 19-வது வட்டார தி. மு. கழகச் சார்பில் 17—11—68 மாலை 6-மணிக்கு மேலப் பொன்னகரம் முக்கிய வீதியில்—திரு. பெ. வைரவன் தலைமையில்—கவிஞர் ந. மா. முத்துக்கூத்தன் குழுவினரின் 'நான் ஒரு தி. மு. க.' என்ற வில்லிசைக் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

'கேட்கிற அளவு தரவும் இயலாது'

'வெளியிலிருந்து தருவிக்கவும் கூடாது'

கேரளத்தின் அரிசி கோரிக்கைக்கு மத்திய அரசின் பதில்

புதுடில்லி, நவ. 15—
'வெளிநாட்டிலிருந்து நேரடியாக அரிசி இறக்குமதி செய்யக் கூடாது" என்று மத்திய அரசு தடை விதித்திருக்கிறது.

அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் வெளிமாநிலங்களிலிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ அரிசி வாங்கிக் கொள்வதற்குக் கேரள அரசு, மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருந்தது.

இதுகுறித்து மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் உணவுத்துறை அரசாங்க அமைச்சர் ஏ. பி. சிண்டே கூறியதாவது :—

"கேரள அரசு கோரும் அவ்வளவு அரிசியைத் தருவதற்கு மத்திய அரசால் இயலவில்லையென்ருல், வெளிமாநிலங்களிலிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ அவர்களாகவே அரிசி வாங்க விரும்புகிருர்கள்; ஆனல், வெளிநாடுகளிலிருந்து நேரடியாக அரிசி இறக்குமதி செய்துகொள்ள கேரள அரசை அனுமதிக்கமாட்டோம்."

சென்னை -- கோவை தொலைபேசி

நேரடித் தொடர்புக்கு வசதி

கோவை, நவ. 15—
சென்னைக்கும் -- பெங்களூருக்கும் நேரடித் தொலைபேசி வசதி செய்யப்பட்டிருப்பது தெரிந்த ஒன்ருகும்.

இவ்வசதியினுல், தொலைபேசி நிலையத்தின் உதவியின்றி நாமே எண்களைச் சுழற்றி, நினைத்த நேரத்தில் பெங்களூரில் உள்ளவர்களுடன் பேச முடியும்.

இதே போன்ற நேரடித் தொலைபேசி வசதியை, சென்னை -- கோவைக்கு இடையே ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்றுவருகின்றன; இதற்காக, சென்னையிலிருந்து கோவைவரையில் தொலைபேசிக் கம்பிகள் போட்டாகிவிட்டன; அதைச் சரிபார்க்கும் வேலை நடைபெற்றுவருகிறது; விரைவில் இந்தப் பணி முடிந்துவிடும்; டிசம்பருக்குள், சென்னை -- கோவை தொலைபேசி வசதி தொடங்கிவிடும்.

மன்னர்குடியில் நமது விற்பனையாளர்

மன்னர்குடியில் 'நம் நாடு' கிடைக்கும் இடம் :—

பாண்டியன் பண்ணை,
15, கீழ ஜைனத் தெரு,
மன்னர்குடி.